தொகுதி-௫௫

பகுதி-௪

Vol. 55

No. 4

செந்தமிழ்

திருவள்ளுவர்

ஆண்டு 1990

விகாரி-ஆடி

July-1959

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

உள்ளுறை

1. நாவலர். ச. சோமசுந்தர பாரதியார்
வாழ்க்கை வரலாறு 93
2. வடசொல்லின்றித் தமிழ் வாழாதா?
(பேராசிரியர் அ. கி. பரந்தாமனுர் M. A.) 104
3. நாடகத் தமிழ்ச் சொற்கள்,- கினேயம்
ப. சுந்தரேசன். 108
4. சிலம்பின் சிறப்பு.
மது. ச. விமலானந்தம். எம். ஏ. 112
5. சங்கச் செய்திகள் 117
6. மதிப்புரை 124

"செந்தமிழ்" ஆசிரியர் குழு

1. நிர்வாக ஆசிரியர். தமிழவேள். திரு. பி. டி. இராசன்.
B. A, (Bar-at-Law) M. L C.
2. திரு. சித்தாந்த கலாநிதி, பேராசிரியர் ஔவை. சு. துரைசாமிப்
பிள்ளை. தியாகராசர் கல்லூரி, மதுரை
3. டாக்டர். திரு. மா. இராசமாணிக்கனுர் M. A. L. T. M. O. L. Ph. D,
சென்னை.
4. திரு. பேராசிரியர். பி. சேதுமுத்து. M A. B. D.
5. திரு. முகமது சுல்தான் M. A. B. L. வழக்குரைஞர், மதுரை.
6. திரு வி. சண்முகசுந்தரர் M. A. B. L. செயலாளர்,
மதுரைத் தமிழ்ச்சங்கம். அரசாங்க வழக்குரைஞர். மதுரை
7. திரு. கி. பழநியப்பன்,
தலைவர். மதுரைத் திருவள்ளுவர் கழகம்-மதுரை.
8. வித்துவான். திரு. கு. மா. திருநாவுக்கரசு, பொறுப்பாசிரியர்
தமிழ் விரிவுரையாளர், செந்தமிழ்க்கல்லூரி, மதுரை.

3582

கடவுள் துணை

செந்தமிழ்

தொகுதி ருரு
Vol. 55

திருவள்ளுவர் ஆண்டு 1990
விகாரி–ஆடி
1959—July

பகுதி. ச
No. 4.



நாவலர் பாரதியார்
80 ஆண்டு நிறைவு
27—7—59 திங்கட்கிழமை

நாவலர் பாரதியார் வாழ்க்கை வரலாறு

1. தோற்றமும் ஏற்றமும்

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு ஏற்ப, நாவலர், கணக்காயர், டாக்டர் என்ற பட்டங்களைப் பெற்றவரும் 27—7—1959உ யாகிய இன்று எண்பதாண்டு நிறைவு பெற்றவருமான திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் 27—7—1879ல் திருநெல்வேலி நகரில் தோன்றினார். நாவலர் பாரதியாரின் முழுப்பெயர் சச்சிதானந்தசோமசுந்தர பாரதியார் என்பதாகும். அப்பெயரை ச. சோ. பாரதியார் என்று வழங்குவர்.

எட்டயபுரம் அரண்மனைப் பண்ணைத் தலைவராய் வாழ்ந்த எட்டப்பபிள்ளை என்னும் சுப்பிரமணிய நாயகரே நாவலர் பாரதியாரின் தந்தையாவார். பிள்ளைப் பேற்றிற்கே பெற்றோர் திருநெல்வேலி சென்றிருந்தனர். எனவே நாவலர் பாரதியார் திருநெல்வேலியில் பிறந்தவரானாலும் சொந்த ஊர் எட்டயபுரம் என்றே சொல்லவேண்டும்.

நாவலர் பாரதியார் பிறந்து, 30 நாள் சென்று எட்டயபுரம் வந்ததும் அரசர் தாயார் லோகமாதா என்று பெயர் வழங்கிய இலட்சுமியம்மன் அவர்கள் குழந்தையைக் கண்டு தானே வளர்க்க விரும்பினார். பெற்றோரும் உடன்பட்டனர். அரசியார் கண்காணிப்பில், அரவணைப்பில் பத்து வயது நிரம்பும் வரையில் பாரதியார் வளர்ந்தார். அப்பத்தாண்டுகளும் நாள் தோறும் ஊன் சோறு உண்டார். அரண்மனையின் செழிப்புக்குச் சொல்லவா வேண்டும்!

அரண்மனை அரசியார் மறைவான பின், நாவலர் பாரதியார் பெற்றோருடன் வாழ வந்துசேர்ந்தார். அந்தப் பதினே

ராம் ஆண்டிலிருந்தே வீரசைவராக மாறினார். பாவலர் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் இளமையிலிருந்தே நாவலர் பாரதியார் நெருங்கிப் பழக நேர்ந்தது.

சூழ்நிலையாலும் தம் நுண் மாண் நுழை புலத்தாலும் நாவலர் பாரதியார் மற்றொரு பெருமாற்றமும் அடைந்துள்ளார். அது அவர் தாய்மொழி பற்றியது. தெலுங்கு அவர் தாய் பேசிய மொழி. என்றாலும் அவருக்கு அருந்தமிழில் ஏற்பட்ட பற்றுதலும் ஈடுபாடும் அம்மொழி மறந்து தமிழ் மயமானார். இதற்கு உலக வரலாறும் வழி காட்டுகிறது. நெப்போலியன் தாய் மொழி இத்தாலி. ஆனால் அவ்வீரன் மனம், மொழி, மெய் மூன்றும் பிரஞ்சு மயமாகியதன்றோ!

நாவலர் பாரதியார் ஆங்கிலத்தையே ஊன்றிக் கற்கத் தூண்டப்படினும், எட்டயபுரம் கோவில் வாகன மறைவில் பாவலர் பாரதியாரோடு மறைந்திருந்து தமிழ் நூல்களை ஊக்கமாகக் கற்கவே துணிந்தார். அதன் விளைவாகவே இன்று அவர் தமிழ்ப் பேராசிரியராகத்திகழ்ந்து வாழ்கிறார். அவரைத் தமிழகம் பாராட்டுகின்றது.

எட்டயபுர மன்னர் தாயார், முன்பு குறிப்பிட்ட இலட்சுமி அம்மன் அவர்கள் நாவலரிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதை நாம் மற்றொரு உண்மையாலும் உணர்ந்து மகிழலாம். அவ்வம்மையார் பன்னிரண்டு ஏக்கர் புன்செய் நிலத்தை விலைக்கு வாங்கி நாவலர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார்கள். அவ்வம்மையார் அவர்கள் இவ்வாறு பிற்காலத்தில் விளங்கும் தமிழாராய்ச்சி வீரனை ஆதரித்து வளர்த்த பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்களுக்கு நம் நன்றி உரித்தாகுக.

2. கலையும் நிலையும்

''பதினோராம் ஆண்டு அவர் தந்தை (எட்டயபுரம் அரண்மனைப் பண்ணைத் தலைவர்) உடன் வாழ்ந்து கல்வி கற்கத் தொடங்கினார் நாவலர் பாரதியார். அதுவரையில் கல்வி

கற்கும் வாய்ப்பே இல்லாமல். அன்பில் மூழ்கடித்து வளர்த்தவர் அரசியார் இலட்சுமிஅம்மன் அவர்கள். "மக்கள் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு" என்றதைக் கருதினர்போலும்! வருங்காலத்தில் தம் அன்புக்குரிய குழந்தை கல்வியிலும் முன்னேற வேண்டும் என்று கருதிப் போலும், பன்னிரெண்டு ஏக்கர் நிலம் வாங்கி நாவலர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். அந்நிலத்தை விற்றே நாவலர் கல்வியின் மேற்பகுதி நிறைவேறியது.

எட்டயபுரத்தில் எட்டாம் வகுப்பு வரையில் நாவலர் கற்றார். அங்கே கற்கும்போதே "விளையும் பயிர் முளையில் தெரிந்தது." அவர் பூங்கணிதப் பாடத்தில் வல்லுநரானார். அவரை ஆசிரியரும் பாராட்டினர். பாராட்டிய ஆசிரியர் அந்தணர். அந்தணச்சிறுவர்களை விட மிக உயர் நிலையில் நாவலரை மதித்துப் பாராட்டினர். இயூகிலித்து தனிமங்கள் (Euclids Elements) என்ற பூங்கணிதம் ஆசிரியரால் நடத்தப்பெற்றது. முதல் ஒரு செயல்திறம் செய்து காட்டினர் ஆசிரியர். அடுத்த தேற்றங்களை நாவலரே நன்கு தெரிந்து எழுதிக்காட்டி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினர். என்றாலும் அவரே கணிதத்துறை முழுதும் கற்க முடியாமல் போனது பற்றி வருந்தினர். எண்கணிதத்துடன் பூங்கணிதம் நன்கு நுண்ணியமுறையில் கற்றுவரினும் கணிதத்தின் ஏனையபாகமாகிய நுண்கணிதம் (Algebra) அவருக்கு வரவில்லை. காரணம் அக்கணித ஆசிரியர் தெளிவாகச்சொல்லித் தரவில்லை. கல்விக்கு இன்றியமையாதது கணக்கு என நன்கு உணர்ந்த நாவலர் அது தனக்கு வாய்க்கவில்லையே என்று வருந்துவதுண்டு.

"கணக்கறிந்தார் கல்விகற்றறிந்தாரே" என்பர் திருமூலப் பெருந்தகை. அறிவுக்கண், கணக்கேயன்றோ! மகாத்மா தமக்குக் கையெழுத்து நன்கமையவில்லை என வருந்தியதுபோல நம் நாவலர் கணிதத்தில் தாம் வல்லுநர் ஆகவில்லையே என வருந்துவதுண்டு. இன்றைய அறிவு

லகம் முழுவதும் கணக்கியல் அடிப்படையில் அமைந்திருக்கிறது. ஒரு நாடு எவ்வளவு முன்னேறியிருக்கிறதெனின், அது பயன் படுத்தும் கணக்கின் அளவே என்பர் அறிஞர்.

எட்டயபுரத்தில் கல்வி கற்றுத் தேர்ந்த பின்னர் திருநெல்வேலிக்கும் பின்னே சென்னைக்கும் சென்று கல்வி கற்ற நாவலருக்கு அறிஞர் (Schafter) சாஃப்டர், அறிஞர் மில்லர் என்ற பெரியார்களின் துணைகிடைத்தது பெரிதும் பாராட்டத்தக்கது. அறிவிலும், பொருளிலும் துணைபுரிந்த பலரில் இவர்களையும் குறிப்பிட வேண்டும். நெல்லையில் சி. எம். எஸ். கல்லூரியில் இளங்கலைவாணர் (F.A.) ஆனார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் கலைவாணர் (B.A) ஆனார். பின் சட்டம் பயின்று அலுவல் பார்த்தார். அப்போது கலை வல்லுநர் (M. A) ஆனார். எம். ஏ–யில் தமிழை முதன் மொழியாகவும் மலையாளத்தைத் துணைமொழியாகவும் கற்றார். எம். ஏ-யில் இருமொழிகள் படிக்க வேண்டும் அப்போது!

திருநெல்வேலிக் கல்லூரியில் கிறித்துவ சமயப்பாடம் கற்பிக்கும் ஒருவர் தமிழர் சமயத்தை இழித்துரைத்தார். தமிழர் இலைபோட்டுண்ணும் முறையை நகைத்தார். அவருக்கேற்ற பதில் தந்து வகுப்பே அவ்வாசிரியரை நகைக்கும் படி செய்தார் நாவலர் பாரதியார். அப்போது நகைச்சுவை ததும்பப் பேசும் திறனுடையார் பாரதியார். கல்லூரித் தலைவரும் நாவலர் பக்கமே நின்று அந்த ஆசிரியர் தன்னடக்கமற்ற நடத்தையைக் கண்டிக்க நேர்ந்தது. சமயம் போதிப்பவர்கூடச் சமயமறியாமல் போதிப்பது பெருந் தவறன்றோ!

நாவலருக்குச் சென்னையில் ஆசிரியராகத் திகழ்ந்தவர்களுள் மறைமலையடிகள் ஒருவர்; வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் மற்றொருவர், இத்தகைய அறிஞர் பலரின் கூட்டுறவால் நாவலர் பாரதியார் தமிழ் ஊற்றம் பெற்றார். தமிழ் கற்றவர் அனைவரும் தமிழ் ஊற்றம் உடை

யவர் என்பதற்கில்லை. நாவலருக்கு ஏற்பட்ட தமிழ் ஊற்றம் அளவைக் கலையாலும் (Logic) அறிஞர் உறவாலும் உருவாகியது எனலாம்.

3. இல்லறமும் நல்லறமும்

நாவலர் பாரதியாருக்குப் பதினைந்தாம் வயதிலேயே முதல் திருமணம் நடந்தது. திருமதி மீனாட்சியம்மையார் முதல் மனைவியார். அந்தணரில்லாமல், வடமொழி மந்திரம் ஓதாமல், தேவாரம் பாட, திருப்பல்லாண்டு முழங்கத் திருமணம் நடத்த வேண்டும் என்று நாவலர் தம் தந்தையிடம் வற்புறுத்தினார்.

மங்கை மாங்கல்யத்தை இழப்பாள் என்று சொல்லித் தந்தை மறுத்தார். வீரசைவர் நாவலர் பாரதியார் தேவாரம் பாடும் ஓதுவாரை அழைத்துத் தந்தைக்குச் சமாதானம் சொல்லும்படி வேண்டினார். ஓதுவார் ஓடி மகன் கருத்து நல்லது என்றார். தந்தை ஒப்புக்கொண்டார். நாவலர் விரும்பிய படி முதல் திருமணம் இனிது நடந்தேறியது. இம்முதல் மனைவிக்கு இரு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

முதல் மகன் இராசாராம் பாரதி எனப்படுவார். இவர் டாக்டர், நாட்டாண்மைக் கழக மருத்துவ நிலையங்களில் பணியாற்றி ஓய்வு பெற்று இப்போது எட்டயபுரத்தில் மருத்துவ நிலையம் வைத்துப் பொதுப்பணியாற்றுகிறார். எட்டயபுரத்தில் "தமிழகம்" என்ற பெயரோடு ஒரு பெரிய இல்லம் நாவலர் பாரதியாரால் கட்டப்பட்டது. அம்மாளிகையிலே இப்போது முதல் மகனார் வாழ்கின்றார்.

இரண்டாம்மகன் இலக்குமிரதன் பாரதி எனப்படுவார். இவர் வழக்கறிஞர். எம். ஏ. பி. எல். பட்டம் பெற்றவர். இவர் இப்போது சமுதாயநல மாநில அலுவலராக இருக்கின்றார். சென்னை அடையாறு காந்தி நகரில் ஓர் இல்லம் கட்டி அதில் வாழ்கின்றார்.

மூன்றாவது பெண் இலட்சுமிஅம்மாள் எனப்படுவார். தன்னை அன்போடு பத்து வயதுமட்டும் வளர்த்த எட்டயபுரத்து அரசியார் திருப்பெயரையே தன் ஒரே பெண் குழந்தைக்கு இட்டு நாவலர் தன் நன்றியறிதலைக் காட்டிக் கொண்டார். நாவலர் மகள் திருமதி இலட்சுமிஅம்மாள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எல். கிருட்டின சாமி பாரதியாரின் வாழ்க்கைத் துணைவியாவார்.

இவ்வாறு முதல் மனைவிக்குப் பிறந்த மூன்று குழந்தைகளும் நாவலர் பாரதியார் கண்டுகளிக்க நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

இரண்டாம் மனைவி மலையாள தேசத்தவர். வசுமதி என்பது பெயர். கலப்பு மணம். திருமதி வசுமதி அம்மையாருக்கு இரு பெண்கள் பிறந்தனர். முதல் பெண் திருமதி மீனாட்சி. எம். ஏ. வரை கற்றவர். தந்தையாரின் வீரசைவ ஒழுக்கத்தைப் பின்பற்றிக் கணவரோடு வாழும் பெண் இவர். அடுத்த பெண் திருமதி லலிதா. இவர் டாக்டர். ஒரு டாக்டரை மணந்திருக்கிறார். இப்போது மதுரை மருத்துவக் கல்லூரி விரிவுரையாளர்களில் திருமதி. லலிதா ஒருவர்.

இவ்வாறு நாவலர் பாரதியார் குடும்பம் பல துறைகளிலும் முன்னேறியுள்ள செய்தி தெரியலாம்.

4. ஆய்வும் ஓய்வும்

(1905 லிருந்து 15 ஆண்டுகள் நாவலர் பாரதியார் தூத்துக்குடியில் வழக்குரைக்கும் தொழில் புரிந்தார். தூத்துக்குடியில் அலுவல் பார்த்தபோது நாட்டுப்பற்றின் சிகரமாக விளங்கிய வ. உ. சிதம்பரனாரிடம் நெருங்கிப் பழகினார். அவர் பாரதியாரின் அறிவின் திறனைக் கண்டார். நாவலர் பாரதியாருக்கு நூறு வெண் பொற் காசுகள் திங்கள் தோறும் தந்து கப்பலோட்டும் தம் கம்பெனிச் செயலாளராக அலுவல் பார்க்கும் வாய்ப்புளித்தார்.

வீர சிதம்பரனாரின் கூட்டுறவு நாவலருக்கு உறுதுணையாகியது. எனினும் துன்பம் செய்யும் நிலையும்ஏற்பட்டது. வீரசிதம்பரனாரோடுசேர்ந்த பாரதியாரை ஆட்சியாளர் அச்சுறுத்தினர். அதெற்கெல்லாம்அஞ்சாதவரானார்நாவலர்.

ஒருவர் உயர்வு அவர்தம் ஓய்வை எவ்வாறு பயன் படுத்துகிறார் என்பதைப் பொறுத்ததே ஆகும். பாரதியார், நாவலர், கணக்காயர், டாக்டர் என்ற பட்டங்களையும் பல பாராட்டுரைகளையும் பெறக் காரணம் அவரது ஓயாத உழைப்பே ஆகும். அவர் ஓய்வுநேரத்தில் விருப்பத்தோடு பயின்றது தமிழே. தமிழ் ஆராய்ச்சி புரிந்தது அவர் மேன்மைக்கு வழி வகுத்தது.

நாவலர் பாரதியாரின் மதிவன்மையை, சொல்லாடும் திறமையை நாட்டுக் கோட்டைநகரத்து மக்கள் அறிந்து தூத்துக்குடி சென்று தம் வழக்குகளுக்குத் தேவகோட்டைக்கு அழைத்துப் போந்தனர். நெடுந்தொலையான தூத்துக்குடிக்குச் சென்று அழைப்பது அவர்களுக்குத் துன்பமாய் இருந்ததால் மதுரையில் வந்து இருந்துவிடும்படி அவர்கள் வேண்டிக்கொண்டனர். அதற்கு இசைந்து நாவலர் 1920ம் ஆண்டு மதுரை வந்துவாழ்ந்தார்.

செட்டி நாட்டு அரசர் இராசா சர் அண்ணாமலைச்செட்டியார் அவர்கள் அழைப்பை ஏற்று நாவலர் பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்குத் தமிழ்ப்பேராசிரியராகச்சென்றார்.அங்கே 1933-38 வரை ஆற்றிய கணக்காயர் தொழில் பிணக்கறுக்கும் நல்லோர் தொழிலாகவே இருந்தது. நடத்திய ஆராய்ச்சியும் நாட்டுக்குப் பயன் பட்டுத் திகழ்ந்தது.

தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்று தம் தொல்காபிய ஆராய்ச்சி நூலில் எழுதிய திரு மு. இராகவஐயங்காருக்கு ஏற்ற பதில் தந்தார் நாவலர். தமிழர்களின் திருமணவாழ்வில் களவறமும், கற்பறமும் தொல்காப்பியர்

காட்டியது. இது வெனத் தம் ஆராய்ச்சிஉரையால்காட்டித் தமிழர்கள் காட்டுமிராண்டிகள் அல்லர் என்று காட்டினுர் பாரதியார். பாரதியாரோடு பகைத்தெழுந்தனர் பலர். தம் சொல்லாலும் எழுத்தாலும் தம் கூற்று உண்மை என நாட்டினுர் நாவலர். இவ்வாறு தமிழர் பண்பு காத்தார் பாரதியார். தமிழர் தமிழ் ஊற்றமும் உணர்வும் இன்னும் பெற்றே தீரவேண்டும்.

நாவலர் பாரதியார் ஓய்வு நேரங்களில் கம்பன் கவி யமுதத்தைப் பருகினுர். புதுமை ஒன்று கண்டார். தசரதன் செய்தது தவறு என்று அவருக்குத் தோன்றியது. கூர்ந்து ஆராய்ந்தார். சான்றுகளும் தெரிந்தன. சில சொற்பொழி வுகளில் அக்கருத்தை வெளியிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங் கத்தார் அழைத்து இச்சொற்பொழிவையே நிகழ்த்தச்செய் தனர். அது உருக்கொண்டு ''தசரதன் குறையும் கைகேயி நிறையும்'' என்னும் நூலாக 1926-ல் வெளிவந்தது.

திருவள்ளுவர் வாழ்க்கை பற்றிய பல ஐயங்கள் நாவலர் பாரதியார் மனத்தில் தோன்றியதால், அதுபற்றி ஆழமாகச் சிந்தித்தார். தம் ஆராய்ச்சியைச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பல்கலைக் கழகச் சொற்பொழிவின் போது 1929-ல் வெளியிட்டார். சொற்பொழிவைக் கேட்டுக்கொண் டிருந்த டாக்டர். உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் எழுந்து அன்புகனியப் பாராட்டியதோடு மதுரைத் தமிழ்ச்சங்கத் தாருக்கு எழுதி வெளியிடும்படி தன் விருப்பத்தையும் தெரி வித்தார். அதன்படி மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் நாவலர் பாரதியாரிடம் எழுதி வாங்கி அச்சிட்டு ''திருவள்ளுவர்'' என்னும் அந்நூலை 1929-ல் வெளியிட்டனர்.

''சேரர் தாயமுறை'' என்னும் அரிய ஆராய்ச்சி நூல் ஒன்று 1935-ல் வெளிவந்தது. ''சேரர்பேரூர்'' என்ற ஆராய்ச்சி நூலும் வெளிவந்தது. ''மாரிவாயில்'' என்னும் சீரிய நூல் ஒன்றும் பாடல் நூலாக எழுந்து 1936-ல் வெளிவந்தது.

அருந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குப் பொருத்தமான புத்துரை கண்டு 1942-ல் வெளியிட்ட பெருமை நாவலர் பாரதியார் அவர்களைச்சேரும். ''மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி'' என்னும் பாட்டு நூல் 1947-ல் வெளிவந்தது. இவற்றைத் தவிரப் பல கட்டுரைகள், ஆராய்ச்சி உரைகள் பலவிதழ்களில் வெளிவந்துள்ளன.

5. பட்டங்களும் பாராட்டுரைகளும்

பாவலர் பாரதியாரோடு நாவலர் பாரதியார் இளமைப் பருவத்தில் திரிந்தபோது இருவரும் பாட்டியற்றுவர். பாவலர் பாரதியாருக்கு ஓர் அவையார் பாரதிப் பட்டம் வழங்க நினைத்தனர். அப்போது அவருடன் பழகித் திரியும் நாவலர் பாரதியாருக்கும் அப்பட்டத்தை வழங்கத் தீர்மானித்தனர். அவ்வாறே இருவருக்கும் 'பாரதி' என்னும்பட்டம் வழங்கப் பெற்றது. பாவலர் சுப்பிரமணியம், சுப்பிரமணியபாரதியானார். நாவலர் சோமசுந்தரம், சோமசுந்தர பாரதியானார். பாரதி என்பது நாமகள் பெயர். கல்வியில் மேம்பட்ட காரணத்தால் கிடைக்கப்பட்ட பட்டமிது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தார் திரு. ச. சோ. பாரதியாரின் தமிழாராய்ச்சியையும் சொல்லாற்றும் திறமையையும்கண்டு வியந்து, உவந்து, 1944-ல் அழைத்து ''நாவலர்'' என்னும் நானிலம் போற்றும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தனர். நாவன்மையுடையவர் நாவலர்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் இருபது ஆண்டுகளுக்கு மேலாக இறைவி மீனாட்சி திருக்கோவிலில் இருந்து குறளோடு சங்கத் தமிழையும் குழைத்து அன்பர்களுக்கு அள்ளி வழங்கும் பணிபுரிந்து வருங்கால், 1954 ஜனவரியில் நாவலர் பாரதியாரை அழைத்து, பெருவிழா ஒன்று நடாத்தி, மதுரை மீனாட்சி ஆலை உரிமையாளர் உயர்திரு. கருமுத்து. தியாகராசச் செட்டியார் அவர்கள் தலைமையில் பொன்னாடை போர்த்தி ''கணக்காயர்'' என்னும் பிணக்

கறுக்கும் பட்டம் ஒன்றும் வழங்கி மகிழ்ந்தனர். கணக்காயர் என்பது இலக்கண இலக்கியங்களை ஆய்ந்துரைப்பவர் என்ருகும்.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார் நாவலர் பாரதியாரின் தமிழாராய்ச்சியையும் தமிழாழத்தையும் பாராட்ட வேண்டும் என்ற கருத்துக்கொண்டு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் என்னும் உயர் பட்டத்தைக் கொடுத்துப் பெருமைப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இராசா சர். முத்தையாச் செட்டியார் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலேயே ஒரு பொன்னுடை போர்த்து விழா நடத்தி மகிழ்ந்தனர். பன்மொழிப் புலவர் T. P. மீனுட்சிசுந்தரனர், டாக்டர் ஆர். பி. சேதுப் பிள்ளை, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் முதலானேர் பாராட்டுப் பகர்ந்தனர்.

நாவலர் பாரதியாருக்குச் சொந்தமான பங்களா ஒன்று பசுமலையில் இருக்கிறது. அதில் இப்போது தம் இரண்டாம் மனைவியுடன் வாழ்ந்து வருகிருர்கள். நாவலருக்குச் சொந்தமாகச் சொத்து உண்டு. அது எட்டயபுரம், முடுக்கன் மீண்டான்பட்டி முதலான திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்களில்உண்டு. சொத்து நன்செய்களும் புன்செய்களுமாகும். ஆண்டிற்குப் போதுமான வரும்படி உண்டு. அதனைக் கொண்டு நாவலர்பாரதியார் பசுமலையில் இனிமையாக வாழ்ந்து வருகிருர்கள்.

வாழ்க பாரதியார்!

வளர்க தமிழாராய்ச்சி!!

வடசொல்லின்றித் தமிழ் வாழாதா?

[அ. கி. பரந்தாமனுர் M. A.,]
(தமிழ்ப்பேராசிரியர், தியாகராசர் கல்லூரி, மதுரை.)

68-ஆம் பக்கத் தொடர்ச்சி:

சில வட சொற்கள் தமிழில் புகுந்தன. அங்ஙனமே சில தமிழ்ச் சொற்கள் வடமொழியில் நுழைந்துள்ளன. வட மொழியில் புகுந்துள்ள தமிழ்ச் சொற்களை டாக்டர் கால்டு வெல் எடுத்துக்காட்டியுள்ளார். தமிழ்ச்சொல் வடபாடைக் கண் செல்லாது என்று சேனுவரையர் கூறியது பொருந் தாக் கூற்று. இக்காலமொழி நூலறிஞர்கள் சேனுவரையர் கூற்றை ஒப்புக்கொள்ளமாட்டார்கள்.

ஒரு சொல் வடசொல்லா தமிழ்ச்சொல்லா என்று ஆராய்ந்து தெரிந்துகொள்வதற்கு டாக்டர் கால்டுவெல் தமது திராவிட மொழி ஒப்பியல் இலக்கணத்தின் பிற் பகுதியில் ஆறு விதிகளைக் குறிப்பிட்டிருக்கிறுர். அவை வருமாறு:

1. ஒரு சொல் மட்டும் அடிச்சொல்லும் இனமான சொல்லும் அதிலிருந்து உண்டாகி வளர்ந்த சொல்லும் இல்லாமலிருக்க, அதற்கு இனமான, அதிலிருந்து பிறந்த சொற்கள் தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய திராவிட மொழிகளில் அதனைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச் சொல்என்று கூறலாம்.

2. ஒரு சொல்லின் பொருளை உணர்த்த வேறு பல சொற்கள் வடமொழியில் இருக்க, அந்தப் பொருளுக்குரிய ஒரு சொல் மட்டுமே தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய

திராவிட மொழிகளில் காணப்படுமானால், அதனைத் தமிழ்ச் சொல் அல்லது திராவிடச்சொல் எனத் துணியலாம்.

3. ஒரு சொல் வடமொழியில் மட்டும் காணப்படுகிறது. அது வடமொழிக்கு இனமான கிரேக்கமொழி, லத்தீன்மொழி, ஜெர்மன் மொழி முதலிய ஆரியமொழிகளில் காணப்படவில்லை. ஆனால், அச்சொல் திராவிட மொழிகளில் எல்லாம் வழங்குகிறது. இப்படி இருக்கும் சொல்லைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச் சொல் என்று கூறலாம்.

4. ஒரு சொல்லின் பிறப்பைப் பற்றி வடநூலார் கூறுவது நம்பத்தகாததாயும் விந்தையானதாயும் இருக்க, தமிழ் நூலார் கூறுவது பொருத்தமாயிருந்தால், அச்சொல்லைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச்சொல் என்று சொல்லலாம்.

5. ஒரு சொல் திராவிட மொழிகளில் தக்கதாகவும் அடிச்சொல்லுடன் தொடர்புடையதாகவும் இருக்க, வடமொழியில் அப்படியில்லாவிட்டால், அச்சொல்லைத் தமிழ்ச் சொல் அல்லது திராவிடச்சொல் எனலாம்.

6. வடமொழியில் பெருமதிப்புள்ள திராவிடமொழிப் புலவர்கள் ஒரு சொல்லைத் தமிழ்ச் சொல் அல்லது திராவிடச் சொல் என்று கூறினால், அச்சொல்லைத் தமிழ்ச்சொல் அல்லது திராவிடச் சொல் எனக் கொள்ளலாம்.

இவ்விதிகளை மேற்கொண்டு வடமொழியையும் நன்கு அறிந்தவர்கள் நடுநிலையில் நின்று ஆராய்ந்து பார்த்தால், இப்பொழுது வடசொற்கள் என்பவற்றுள் பல தமிழ்ச் சொல்லாக இருப்பதை அறியலாம். எதை எடுத்தாலும் வடசொல் என்னும் காலம் மலையேறிவிட்டது. ஐரோப்பிய அறிஞர்கள் இன்று வடமொழியையும் தமிழ்மொழியையும் நன்கு பயின்று, நடுநிலையில் நின்று ஆராய்ந்து, 'இது வட

சொல் இது தமிழ்ச்சொல்' என்று நன்கு எடுத்துக்காட்டி வருகிறார்கள். உண்மை ஒளி வீசத்தொடங்கி விட்டது. இதுகாறும் வடசொல் என்று கருதப்பட்டவை இப்பொழுது தமிழ்ச்சொல் வரிசையில் இடம்பெற்றுள்ளன.

ஐம்பதாண்டுகளுக்கு முன்பு வடசொல் உதவியின்றித் தமிழ்மொழி நடவாது என்ற கருத்து இருந்தது. அப்பொழுதே டக்டர் கால்டுவெல் அங்ஙனம் கூறிவந்தது தவறு என்று தமிழை பொறுத்தமட்டில் எடுத்துக் காட்டினார். பிறரும் அங்ஙனம் கூறுவது தவறு என்று ஆராய்ச்சியால் அறிந்தனர். வடசொல் உதவியின்றித் தமிழ் தனித்து இயங்க வல்லது என்று தனித்தமிழ் இயக்கம் மெய்ப்பித்து விட்டது. தொல்காப்பிய காலம் முதலே தமிழ்ப் பெரும் புலவர்கள் வடசொற்களை விலக்கியெழுதுவதில் கண்ணும் கருத்துமாயிருந்திருக்கிறார்கள். கி. பி. 10 ஆம் நூற்றாண்டில் சமணர்களால் மணிப்பிரவாள நடையால் வடசொற்கள் தமிழில் புகுத்தப் பட்டன. அதன்பின் வைணவ உரையாசிரியர் நாலாயிரத்திவ்வியபிரபந்தத்திற்கு இயற்றிய உரைகளில் வடமொழியைப் புகுத்திவந்தார்கள். சேனாவரையர், பரிமேலழகர் முதலிய உரையாசிரியர்கள் கூடியமட்டும் வடசொற்களைத் தமிழில் புகுத்தாமல் தூய தமிழைப்பாதுகாத்து வந்ததை அவர்களுடைய உரைகளில் நன்கு காண்கிறோம். கி. பி. 18ஆம் நூற்றாண்டில் கிறித்துவ பாதிரிமார்கள் பேச்சிலும் எழுத்திலும் வடசொற்களைப் புகுத்தி வந்தார்கள்; இன்றும் தமிழ்ப் பாதிரிமார்கள் அங்ஙனம் பேசுவதையும் எழுதுவதையும் காண்கிறோம். இன்று தமிழகத்தில் சிற்றூர்களில் வாழும் மக்கள் வடசொற்களைக் கலவாத தமிழில் பேசுகிறார்கள்; ஆனால், பேரூர்களில் வாழும் தமிழ் மக்களே வடசொற்களை மிகுதியாகப் பயன்படுத்துகிறார்கள். தமிகத்தில் வாழும் பார்ப்பனர்பலர் பழக்கத்தின் கொடுமையாலும் வடமொழி பக்தியாலும்வடமொழி கலந்து தமிழைப் பேசவும் எழுதவும் செய்கி

ரூர்கள் பார்ப்பார் தமிழ் இழிந்தது என்னும் கருத்து தமிழகத்தில் தொன்று தொட்டு உலவி வருகிறது. தமிழகத்தில் உலவிவரும் சில ஏடுகள் அறியாமலும் சில ஏடுகள் வேண்டுமென்றும் வடசொற்களை மிகுந்த தமிழை எழுதிவருகின்றன. ஆனால் பொதுவாக இன்று சிற்றூர்களிலும் பேரூர்களிலும் தூய தமிழில் எழுதவும் பேசவும் பேரார்வம் காட்டிவருவதை பரக்கக் காண்கிறோம்.

உண்மையில் வடசொல் தமிழ்மொழிக்குத் தேவை இல்லை. டாக்டர் கூறுவதைப் படியுங்கள்: உண்மை விளங்கும். அவர் கூறுவது இது.

"வடமொழியிலிருந்து தோன்றியனவே திராவிடமொழிகள் என்று நம்பிய மேலை நாட்டு ஆராய்ச்சியாளர்களுக்கு வடசொற்களையே எடுத்தாளாத, திருந்தாத திராவிட மொழிகளும் அருகி எடுத்தாளும் திருந்தாத திராவிட மொழிகளும் இருப்பது தெரியாது. அல்லாமலும், வடசொற்களை ஓரளவிற்கு எடுத்தாளும் திருந்திய திராவிட மொழிகளும் கட்டாயமாக அவற்றை எடுத்தாளத்தான் வேண்டுமென்பதில்லாமல், விரும்பினால் பயன்படுத்தியும் விருப்பம் இல்லாமற் போனால் அறவே வடசொற்களை ஒதுக்கியும் வருகின்றன என்பதும் அவர்களுக்குத் தெரியாது. ஆனால், இன்றைய நிலையை நோக்கினால் வடசொற்களை அறவே நீக்குவது என்பது தெலுங்கு மொழிக்கு அரிதாகும்; கன்னட மொழிக்கோ மிகவும் அரிது; மலையாள மொழிக்கோ அரிதினும் அரிது. இம்மொழிகள் கணக்கு வழக்கில்லாமல் வடசொற்களை எடுத்தாண்டு வந்துள்ளமையாலும், அச்சொற்களின் உதவியை நாடுவதே வழக்கமாகக் கொண்டுள்ளமையாலும், தத்தம் சிறப்புக்களை இழந்து, தனித்து நின்று இயங்கும் ஆற்றலையும் இழந்து நிற்கின்றன. ஆனால் திராவிட மொழிகள் அனைத்தினும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ்மொழியோ வேண்டுமென்றால், வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் பெற்றிருப்பதோடு அல்லாமல், அவ்வடசொற்களின் உதவியில்லாமல் மிகவும் மேம்பட்டு வளமுற்று விளங்கும் ஆற்றலும் பெற்றிருப்பதாகும்." ஆதலால் வடசொல் உதவியின்றித் தமிழ் வாழும்; வாழமுடியும் என்பதில் ஐயமில்லை என்றறிக.

வி னை ய ம்

சங்கீத வித்துவான் (வாய்ப்பாட்டு) ப. சுந்தரேசன், திருக்குடந்தை

91-ஆம் பக்கத் தொடர்ச்சி:—

ச. *அற்புதச் சுவை* (*அற்புத வினயம்*)

"அற்புத வினைய மறிவரக் கிளப்பின்
செர்ச்சேர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்தி யமைத்தலும் விழித்தலு மிர வாமையுமென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப"

எனும் இந்நூற்பா,

"அற்புத வவிநய மறிவரக் கிளப்பிற்
சொற்சோர் வுடையது சோர்ந்த கையது
மெய்ம்மயிர் குளிர்ப்பது வியத்தக வுடைய
தெய்திய திமைத்தலும் விழித்தலு மிகவாதென்
றையமில் புலவ ரறைந்தன ரென்ப"

எனப்பாடமாறுபாடும் கொண்டு விளங்குவதாயிற்று.

ரு. இன்பச்சுவை (இன்பச்சுவை வினயம்)

"*காமவினையங் கருதுங் காலை*
தூவுள் ளுறுத்த வடிவுந் தொழிலுங்
காரிகை கலந்த கடைக்கண்ணுங் கவின்பெறும்
மூரன் முறுவல் சிறுநிலா வரும்பலும்
மலர்ந்த முகனு மிரந்தமன் கிளவியுங்
கலந்தன பிறவுங் கடைப்பிடித் தனரே"

இந்நூற்பா, காம வவிநயங் ....
........................பிடித்தனரே" எனும் அளவில் மாறுபட்டு நின்றது.

சு. அவலச்சுவை (அவலச்சுவை வினையம்)

"அவலச்சுவை வினையம் அறிவரக் கிளப்பின்
கவலையொடு புணர்ந்த கண்ணீர் மாரியும்
வாடிய நீர்மையும் வருந்திய செலவும்
பீடழி யிடும்பையும் பிதற்றிய சொல்லும்
நிறைமை யழிதலும் நீர்மையில் கிளவியும்
பொறையின் றுகலும் புணர்த்தினர் புலவர்"

இந்நூற்பா, அவலத் தவிநய மறிவரக் ....
....புலவர் எனநின்றதோடு நிறைமை என்பது நிறைகை எனவும் மாறுபட்டு நின்றது.

எ. நகைச்சுவை (நகைச்சுவை வினையம்)

"நகையின் வினையம் நாடுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது முரிபுருவ முடையது
செய்வது பிறிதாய் வேறுசே திப்பதென்
றையமில் புலவ ராய்ந்தன ரென்ப"

இந்நூற்பா,

"நகையி னவிநய நாட்டுங் காலை
மிகைபடு நகையது பிறர்நகை யுடையது
கோட்டிய முகத்தது.........விட்டு முரிபுருவமோடு
விலாவுறுப் புடையது செய்வது பிறிதாய்
வேறுசே திப்பதென் றையமில் புலவ
ராய்ந்தன ரென்ப"

எனும் அளவில் பாட மாறுபாடு கொண்டு விளங்குவதாயிற்று. இந்நூற்பாவிற்கு மட்டும் புள்ளிகள் இடப்பட்ட இடத்தில் அமைந்த சொற்கள் அறியக்கூடவில்லை.

அ. நடுவுநிலைச்சுவை (நடுவுநிலைச்சுவை வினையம்)

"நாட்டுங் காலை நடுவுநிலை வினையம்
கோட்பா டறியாக் கொள்கையு மாட்சியும்

அறந்தரு நெஞ்சமு மாறிய விழியும்
பிறந்த காட்சி நீங்கிய நிலையும்
குறிப்பின் ருகலும் நகைமிக வுடைமையும்
அளத்தற் கருமையு மன்பொடு புணர்த்தலும்
கலக்கமொடு புணர்ந்த நோக்குங் கதிர்ப்புங்
விலக்கா ரென்ப வேண்டுமொழிப் புலவர்''

இந்நூற்பாவும், நாட்டுங்காலை நடுவுநிலை யவிநயம்.................
.................என மாறுபட்டதோடு,

''நாட்டுங்காலை நடுவுநிலை யவிநயங் கோட்பாடறியாக் கொள்கையு மாட்சியு மறந்தரு நெஞ்சமு மாறிய விழியும் பிறழ்ந்த காட்சி நீங்கிய நிலையும் குறிப்பின்ருகலுந் துணுக்கமில்லாத் தகைமிக வுடைமையுந் தண்ணென வுடைமையுந் அளத்தற் கருமையு மன்பொடு புணர்தலுங்.........................
.....................புலவர்'' எனப்பாட வேறுபாடும் கொண்டு விளங்குவதாயிற்று.

௬. உருத்திரச்சுவை

இச்சுவை பற்றிய குறிப்பு, சுப்பராயசெட்டியார் அவர்கள் பதிப்பில் ''உருத்திரச்சுவை வினையம் விறல் என்பது. சத்துவம் என்பாரும் உளர்'' என்றே உள்ளது. வேறு விளக்கமில்லை.

சிலப்பதிகாரத்தினைச் சீரியமுறையில் சிறந்த உழைப்போடு அச்சுவாகன மேற்றியவர் உ. வே. சாமிநாதஐயர் அவர்கள் என்பதைத் தமிழுலகம் நன்கறியும். அப்பதிப்பில் இச்சுவைக்கு அடியார்க்கு நல்லாரால் கூறப்பட்ட விளக்கம் உண்டு. அஃதாவது,

''உருத்திரச்சுவை யவிநயம் அஃதாவது விறல் என்பது; சத்துவமென்பாருமுளர். அச்சத்துவந்தான் பத்து வகைப்படும். என்னை?

1. மெய்ம்மயிர் சிலிர்த்தல் 2. கண்ணீர் வார்தல்
3. நடுக்கமடுத்தல் 4. வியர்த்தல்
5. தேற்றம் 6. களித்தல்

7. விழித்தல் 8. வெதும்பல்
9. சாக்காடு 10. குரற் சிதைவு

என விவை" எனவும் "சத்துவமாவது குறிப்பு வரையறை. ஆவது சுத்தச் சுவையாகின்ற ஒன்பதினும் பாவிக்கும் அத்துணையே மெய்ம்மைத்தாய் வருவதெனக்கொள்க" என்பதாம்.

இக்கருத்துகளின் விரிவான விளக்கத்தினை யாம் விறல் எனுந் தலைப்பில் தனிக் கட்டுரையில் எழுத எண்ணியிருப்பதால் இத்துடன் நிறுத்திக்கொள்கின்றேம். இதுகாறும் கூறியவாற்ருல் மிகப் பழைய நாடகத் தமிழ்ச்சொற்களுள் ஒன்ருன விநயம் என்ற தூய தமிழ்ச் சொல் பிற்காலத்தில் ஏடெழுதுவோரால் பிற்கால வழக்கினை ஒட்டி, வினயம் எனவும் விநயம் எனவும் அவிநயம் எனவும் ஏதோ ஒரு சூழ்நிலையில் மாறுபாடெய்தியது என்பதை நன்கு ஓர்ந்துணரலாம். இம்மாறுபாடுகளை, பதிப்பாசிரியர்கள் நன்ருகப் பாதுகாத்துவைத்துள்ளளமையினுலே இக்காலத்திய நம்மனேர்க்கும் பழந்தமிழ் நலங்கள் நன்கு தெரிய வருகின்றன.

வடமொழி அபிநயம், தமிழில் அவிநயம் என வழங்கும் கருத்தினைவிட, பண்டைய விநயம் என்ற தூய தமிழ்ச்சொல்லின் பொருளே அவிநயம் எனக் கருதுவதும், இதனை யொத்ததே வடமொழியில் கூறப்படும் அபிநயம் என்ற சொல் எனக்கருதுவதும் விநயம் என்ற சொல் பொருள் மாறுபாடுருது ஏடெழுதுவோரால் மட்டும் அவிநயம் எனத் திரிபு அடைந்துவிட்டதெனக் கருதுவதும் மிகமிகச்சிறப்புடையனவாமென இக்கட்டுரையினைக் கண்ணுறுவோர் யாவரும் நன்கறிந்துணர்வார்களாக.

"சிலம்பின் சிறப்பு"

(மது. ச. விமலானந்தம், எம். ஏ.,)

(தமிழ் விரிவுரையாளர், சரபோஜி அரசர் கல்லூரி, தஞ்சை.)

முன்னுரை;

சந்ததம் மறவாச் செந்தமிழ்ச் சிலம்பாம் சிலப்பதிகாரம் சிறப்புப் பலவுடைத்து. ஏனைக் காப்பியங்களுக்கு அவ்வளவாக இல்லாத-சிலம்பிற்கே உரிய தனிப்பெருஞ் சிறப்புக்களை (unique features) ஆராய்வதே இக்கட்டுரையின் கருத்தாம்:

1. வரலாற்றுக் காப்பியம்:

சிலம்பின் கதை பொய்யோ அன்றிப் புனைந்துரையோ அன்று. ஆசிரியர் காலத்திலேயே உண்மையில் நிகழ்ந்ததோர் உளமுருக்கும் வரலாறாகும். (கதையைப் போன்றே அக்கதையைக் கூறும் காப்பியமும் பண்டைத் தமிழக நாகரிகம், சமயம், கலைநிலை, பண்பாடு ஆகியவற்றைக் கூறுவதாகவும், சேர சோழ பாண்டி மன்னர்களின் ஆட்சிச் சிறப்பையும், நாட்டு வளத்தைதையும் காட்டுவதாகவும் அமைகின்றது.) இங்ஙனம் காப்பியமும், காப்பியபுணர்த்தும் கதையும் 'History and Literature are twin sisters' என்பதற்கேற்ப வரலாறு கூறும் வரலாற்றுக் காப்பியமாய் விளங்கக் காண்கிறோம். எனவே இதனை ஓர் வரலாற்றுக் காப்பியம் (Historical Epic) என்றே கூறலாம்.

2. இலக்கியத்தில் பெறும் இடம்:

வரலாறு கூறும் வளமுடையதோடன்றி, தமிழ் இலக்கிய வரலாற்றில் இஃது ஒரு சிறந்த முதலிடம் பெற்றுள்ளது. தமிழுக்குக் கிடைத்த முதல் காப்பியம் சிலப்பதிகாரமே! செந்தமிழ்ச் சிலம்பின் தோற்றமே வரலாற்றுச் சிறப்புடைத்து; சிறு சிறு தனிநிலை செய்யுட்களைக் கண்ட நாம் முதற்கண் காணும் தொடர்நிலைச்செய்யுளும் சிலப்பதிகாரமே! எல்லை மீறிய இயற்கை

இகந்த நிகழ்ச்சிகள் (Supernatural Element) தமிழ் இலக்கிய வானிலே புது வடிவெடுக்கத் தொடங்கியதும் இக்காப்பியத்திலேதான்! இலக்கிய வரலாற்றில் பல்லாற்றான் பெறும் முதன்மையால் இதனை வரலாற்றுச் சிறப்புடைக் காப்பியமாகவும் (Historic Epic) கருத இடமுண்டு.

3. சங்க இலக்கிய சாரம்:

செந்தமிழ்ச் சிலம்பாஞ் சிலப்பதிகாரத்தைச் சங்க இலக்கியத்தின் சாரம் அல்லது பிழிவு என்று கூடக்கூறலாம். மருதம், நெய்தல், பாலை, முல்லை, குறிஞ்சி ஆகிய அன்பின் ஐந்திணைக்குரிய விழா, ஆடல், பாடல், கூத்து அனைத்தும் முறையே 'இந்திரவிழவூரெடுத்த காதை', 'கானல்வரி', 'வேட்டுவ வரி', 'ஆய்ச்சியர் குரவை', 'குன்றக் குரவை'களில் திகழ்தலால் அகத்திணையைத் தெள்ளத் தெளிய அறிகிறோம். 'வேட்டுவர்', 'காட்சிக் காதை' ஏன்? இன்னும் வஞ்சிக் காண்டக்காதைகளின் பெயர்கள்–செங்குட்டுவன் வடவரை வென்றமைபோன்றவற்றால் புறத்திணையைப் போதிய அளவு புரிந்தவர்களாகின்றோம். அன்றியும் வாழ்க்கையின் சிற்சில கூறுகளைச் சித்தரிக்கும் சங்கச் செய்யுட்களினின்றும் வளர்ந்து இருதிணைப் பலதுறைகள் அமைய முழுவாழ்க்கையை விளக்கும் சிலம்பின் சிறப்பைக் காணும்போதே பண்டை இலக்கியத்தின் பிழிவை மாந்தி மகிழ்கின்றோமன்றோ? எனவே சிலம்பு சங்க இலக்கியப் பிழிவு என்றும், சங்க இலக்கியத்தைத் துறைபோகக் கற்க விரும்புவோர் முதற்கண் சிலம்பினைப் படித்துப் பின் தங்கம் நிகர் சங்கப் பூங்காவில் நுழைதல் நன்றென்றும் கூறலாம்.

4. திருப்புமையம்:

தமிழ் இலக்கிய வரலாற்றில் இடைநின்று இருமருங்கும் ஒளி வீசும் 'நந்தா விளக்கம்' நந்தமிழ்க்காப்பியம். சங்க இலக்கிய மரபின் இறுதி எல்லையாகவும் பின்னர் எழுந்த புராணங்கள், காப்பியங்கள் ஆகியவற்றின் போக்கு அமைதி போன்றவற்றிற்குத் தோற்றுவாயாகவும் அமைந்து இருமருங்கும் ஆணை செலுத்தும் அரிமாவன்ன அழகுடைத்து அடிகள் வழங்கிய அருமைக்

காப்பியம். முற்காலத்திய தனிநிலைச் செய்யுட் சாயலும், பிற்காலத்திய தொடர்நிலைச் செய்யுட்களின் போக்கும் இதன்கண் ஒருங்கே அமையக் காண்கின்றோம். இந்த முறையில் இது பிற்காலப் புலவர்கட்கெல்லாம் இலட்சியக் கொடுமுடியாய்-வழிகாட்டியாய் அமைந்தது என்றால் அஃது எத்துணையும் மிகையாகாது. பண்டைக் காலத்து உள்ளதுபுனைதலுக்கும் பிற்றை நாளில் பிறங்கிவந்த இல்லதுபுனைதலுக்கும் இடைநின்று - இலக்காகி தமிழ் இலக்கியத் தேரோட்டத்தின் திருப்புமையமாகத் (Turning point) திகழ்கின்றது. எனவே சேரன் தம்பி இசைத்த சிலம்பைத் தமிழ் இலக்கிய வரலாற்றின் திருப்புமையம் எனக் கூறலாமன்றோ ?

5. முத்தமிழ்க் காப்பியம்:

ஏனைக் காப்பியங்கட்கு இல்லாத இன்னொரு சிறப்பு இதற்கு உண்டு. இயற்றமிழும், இசைத்தமிழும், நாடகத் தமிழும் விரவப் பெற்ற 'முத்தமிழ்க் காப்பியம், சிலப்பதிகாரம் எனவேதான் இஃது 'இயலிசை நாடகப் பொருட் டொடர்நிலைச் செய்யுள்' என்ற சிறப்புப் பெயரும் பெறுவதாயிற்று.

6. காப்பியமும் கடவுள் வாழ்த்தும்:

பின்னர் எழுந்த பெருங்காப்பியங்கள் எல்லாம் பிரமனையும், இன்ன பிற தெய்வங்களையும் பரவி அமைய, நந்தமிழ்க் காப்பியம் அங்ஙனம் குறிப்பிட்ட எத்தெய்வத்தையும் கடவுள் வாழ்த்தில் அமைத்து வழுத்தாதது எள்ளறு சிறப்பின் வள்ளுவர் போக்கினையும் கொண்டவர் இளங்கோ வடிகள் என எண்ணத் தோன்றுகிறது. தமிழர் ஒவ்வொருவரும் விழைந்து மேற்கொள்ளவேண்டுவன 'இறை திருப்பணி', 'தமிழ்ப் பொற்பணி', 'நாட்டு நற்பணி' என்ற மூன்றே எனலாம்; இதனையே இளங்கோவும் இயற்கையை ஏற்றிப் போற்றுமாற்றான் குறிப்பாகக் கூறுகின்றாரோ என்னவோ! எல்லாம் வல்ல இயற்கைப் பெருஞ் சக்தியையும், இன்றமிழ் நாட்டையும்-நல்லாட்சியையும் இணைத்து நலந்திகழ் நந்தமிழால் நாவார வாழ்த்துவது சிறப்புடைத்து. சீர்மையுடைத்து. இது போன்றதொரு வாழ்த்தைப் பின்னெழுந்த பெருங்காப்பியங்களிலோ - அன்றி முன் தோன்றிய பேரிலக்கியங்களிலோ - ஏன் சிலம்பொடு தோன்றிய மணிமேகலையில் கூடக்

காணுமாறில்லை நலங்கெழு திங்களையும், நல்லொளிவீசு ஞாயிற்றையும், நலம்புரி மழையையும் நாவார வழுத்தும்-இயற்கையையும் நாட்டாட்சியையும் ஒரு சேர வாழ்த்தி வணங்கும் இளங்கோவின் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது. தமிழ் இலக்கிய வானில் ஒளிவீசி ஒளிரும் 'தமிழ் வர்ட்ஸ் வொர்த்தாம்' இளங்கோ கண்ட இயற்கையை இன்றமிழால் பாடிப் பரவிய இயற்கை அன்னையை, அனைவரும் ஏற்றிப் போற்றி இன்புறுவோமாக!

7. பண்பில் பிறந்த காப்பியம்:

பண்பின் அடிப்படையாகப் பிறந்த காப்பியம் இது: 'நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்' என்ற பண்பே இதன் கண் ஒளிர்ந்து உள்ளத்தை ஒருமைப் படுத்துகின்றது. கண்ணகி-பால் அமைந்த இப்பண்பே கதைக்கு அடிப்படையாகி, காப்பியத் திற்கும் தோற்றுவாயாக அமைகின்றது. தன்னை மறந்த கோவலனைக் கண்ணகி தானும் மறந்திருப்பாளேயானல், மீண்டும் கோவலனுடன் கூடவோ, மதுரைக்குச் செல்லவோ அதன்வழிப் பிறநிகழ்ச்சிகள் நடைபெறவோ வழியில்லை.

எனவே கண்ணகிபால் அமைந்த இப்பண்பே பெருங் காப்பியத்தின் தோற்றத்திற்கே காரணமாகும் என்றும், இப்பண்பே எல்லாப் பாத்திரங்களிடத்தும் ஏற்றமுடன் திகழ அதனல் காப்பியமும் 'நெஞ்சையள்ளுஞ் சிலம்பாக' அமையக் காரணமாயிற்று என்றும் அறிகின்றேம். பண்பின் அடிப்படையாகப் பிறந்த இப்பைந்தமிழ்க் காப்பியத்தை நந்தமிழ்ச் செல்வரனைவரும் போற்றிப் பரவுவார்களாக.

8. முதல் நூல்:

நூல்களின் தோற்றத்தை முதல், வழி, சார்பு நூல்கள் என மூன்ருகப் பிரிப்பர், இத்திறத்தில் சிலப்பதிகாரம் முதல் நூலாகும் கம்பராமாயணம், சீவகசிந்தாமணி, நளவெண்பா, நைடதம் போன்று பிறவற்றைத் தழுவி வாராமல் முதன் முதலாகத் தமிழிலேயே எழுதப் பெற்றது: கதையும் தமிழகத்திற்கே உரிய

ஒன்று. செய்தவனும் சேரநாடு தந்த செந்தமிழ்ச் செல்வனே! இம்முறையில் தமிழனுக்கே உரிய-தமிழகத்தையே சார்ந்த-செய்த முதல்நூல் என்ற சிறப்புடைத்து சி ல ப் ப தி கா ர ம்.

9. காப்பியத்திலே கவிஞர்!

ஏனைக் காப்பியங்கள் எவற்றிற்கும் - எவற்றிலும் இல்லாத தனிப்பெறும் தலையாய சிறப்பு; இளங்கோவடிகளும் இக்காப்பியத்தில் ஓர் உறுப்பாக அமைந்தமையே. 'காட்சிக்காதையிலும்' 'வரந்தரு காதை'யிலும் வந்து காப்பியத்தை வளப்படுத்துகின்றார். காப்பியத்தில் ஓர் அங்கமாக அமையும் அழகும்அமைப்பும் ஈடு இணையற்றனவாம்.

10. பொய்மை குறைந்த காப்பியம்.

உலகிலேயே பொய்மை மிகமிகக் குறைந்த காப்பியம் ஒன்றே உண்டெனில் அது சிலப்பதிகாரமே! இதனை ஏனை இலக்கியங்களில் உள்ள காப்பியங்களோடு ஒப்பிட்டு ஓர்ந்தால் உண்மையை உணரலாம். கிரேக்கப் பெருங்காப்பியங்களான 'இலியட்' (Illiad) 'ஆடிசி' (Cdessy) இலத்தின் காப்பியமாகிய 'ஈனியட்' (Aeniad) ஆகியவற்றின் காப்பியத்தலைவர்கள் கடவுளின் மக்கள். இவர்கள் செயல்கள் அனைத்திற்கும் தேவதைகள் காரணமாகின்றன. ஆங்கில மொழியில் அமைந்த 'இழந்த இன்ப வீட்டி'ன் (Paradise Lost) தலைவன் மக்கள் இனத்தைச் சேர்ந்தவனே அல்லன். தாந்தே தந்த,தெய்வலீலை'யோ (Devinea Comedia) சம்பந்தமில்லா மூன்று உலகங்களைப் பற்றிக் கூறுவதாகும். கவி கெதே அருளியஜெர்மனிய 'பாஸ்ட்' (Faust) என்ற காப்பியமோ சொல்ல வேண்டியதில்லை! இங்ஙனமே சேக்ச்பியர் செய்த 'மாக்பெத்' போன்றனவும் மாயக்காரிகள் செயலைக் கொண்டனவாக விளங்குகின்றன. ஆனால் நம் சிலப்பதிகாரமோ சாதாரண மனிதனின் வாழ்வு தாழ்வுகளைப் பேசுவதாக அமைகின்றது. இதுகாறும் ஒப்பு நோக்கியமையால் உலகிலேயே பொய்குறைந்த கா ப் பி ய ம் சிலப்பதிகாரம் என்றும். இன்னும் மணிமேகலை போன்றவற்றோடு ஒத்திட்டுப்பார்ப்பின் சிலம்பே தமிழில் தலையானது - உலகக் காப்பியங்களில் உயர்ந்தது என்றும் உணரலாம்.

(தொடரும்)

நாவலர் பாரதியார் பாராட்டு விழா.

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௰ ஆடித்திங்கள் ௧௧-ஆம் நாள் (27-7-57) டாக்டர், கணக்காயர், நாவலர், திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்களது எண்பதாவது ஆண்டு நிறைவு விழா மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவை முன்னிட்டுக் காலை 10மணிக்கு ஆயிரம் ஏழைகளுக்கு உணவு வழங்கப்பட்டது.

மாலை 6 மணிக்குப் பாரதியார் மதுரை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியிலிருந்து ஊர்வலமாக உந்து வண்டியில் மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்கு அழைத்து வரப்பட்டார். பாராட்டுக் குழுத் தலைவர் பி. டி. இராசன், தமிழ்ச்சங்கச்செயலாளர் திரு. சண்முகசுந்தரம், திருவள்ளுவர்கழகத் தலைவர் திரு. கி. பழனியப்பன் முதலியோர் தமிழ்ச்சங்க வாயிலில் பாரதியார் அவர்களை வரவேற்றனர்.

கூட்டத்தொடக்கத்தில் செந்தமிழ்க்கல்லூரி மாணவியர் கடவுள் வாழ்த்துப் பாடியதும், திரு. பி. டி. இராசன் அவர்கள் விழாவிற்கு வந்தோரனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். இராமநாதபுரம் மாவட்டத் துணை நடுவர் திரு. எஸ். மகராசபிள்ளை அவர்கள் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினார்கள்.

பாராட்டுக்குழுவின் சார்பில் பண்டிதர் திரு. அ. முத்துசாமிப் புலவர் அவர்களும், செந்தமிழ்க்கல்லூரியின் சார்பில், வித்துவான் திரு. அன்புகருணையானந்தா அவர்களும், மதுரை எழுத்தாளர் மன்றச்சார்பில், திரு. ரவி அவர்களும் திருச்சிராப்பள்ளித் தமிழ்ச் சங்கச்சார்பில் திரு. வீ. அ. பரிமேலழகர் அவர்களும் வாழ்த்துப் பாக்களை வாசித்துப் பாரதியாருக்கு அளித்தனர். பாராட்டுக்குழுவின் சார்பில் திரு. கி. பழனியப்பன் அவர்கள் வெள்ளிக்கலத்தை

அளித்தனர். விழாவிற்குத் தமிழ் நாடெங்கணும் வந்திருந்த வாழ்த்துச்செய்திகளைத் திரு. சண்முகசுந்தரம் அவர்கள் வாசித்தார்கள். 'கல்கி' சதாசிவம் அவர்கள் சார்பில் பாரதியாருக்கு மலர் மாலை சூட்டப்பட்டது.

தலைவர் அவர்கள் தமது முன்னுரையில் கூறியதாவது:-

பாரதியார் அவர்கள் தமிழுக்கும் தமிழனுக்கும் பகையானவர்களைத் தம் நுண்ணறிவு கொண்டு புறமுதுகிட்டு ஓடச் செய்தார். அவரது அஞ்சா நெஞ்சை என்றும் போற்றவேண்டும். அவர் ஒரு கோலினைவைத்திருக்கின்றார், ஆயினும் அதனை ஊன்றுகோலாக அவர் பயன்படுத்துவதேயில்லை. தமிழுக்காகவே அதனைத்தாங்கியுள்ளார் என்று கருதுகிறேன். எனவே எண்பதாண்டு இளைஞராக இன்று காட்சியளிக்கின்றார். இன்றமிழ்ப் பண்பெல்லாம் பாடும் பாவலராக விளங்கும் பாரதியார் விளக்கெண்ணெய் போன்று இருக்கும் கருத்துக்களையும் அமுதமாக்கிக் குழைத்துத்தரவல்ல ஆற்றல் பெற்றுள்ளார். ஏறக்குறைய 50 ஆண்டுகட்கு முன் துணிவாகப் பேசவேமுடியாது. அக்காலத்தில் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. க்கு உற்றதுணையாக இருந்தார். அவரது நட்பில் ஊடாடி, அரசியலிலும் பங்குபெற்று அரும் பெருந் தொண்டினைச்செய்தார், "நாடிப்புலங் கொழிக்குங் கவிவாணர்தம் நாவும் ஆடிக்களிக்கும் மயிலே" என்று கவிமணியவர்கள் கூறியது நம் பாரதியாரை மனத்துட் கொண்டே போலும்! ஆகவே இத்தகைய பெரியாரைக் கொண்டாடவேண்டுமென்றால் தமிழை நன்முறையில் சுவைத்துக் கொண்டாடவேண்டும்.

பிறகு அண்ணமலைப் பல்கலைக் கழகத்தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் பாரதியாரைப் பாராட்டிப் பேசியதாவது:-

தலைவர் அவர்களே! பெரியோர்களே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். பாராட்டுக்குழுவினர் பாரதியாரை "எண்பதாண்டு இளைஞரே

வருகவென்று எழுதி வரவேற்றுள்ளனர். இவ்விடத்திலே கவிமணியின் பாடலொன்று நினைவுக்கு வருகிறது. அஃதாவது:-

> என்ப தாண்டான இளைஞனே இன்னமுதின்
> பண்பெல்லாம் காட்டுதமிழ்ப் பாவலனே—நண்பனே
> வெள்ளகால் செல்வனே வேள்சுப் பிரமணியே
> வள்ளலே வாழ்க மகிழ்ந்து'' என்பது.

சேக்சுபியர் சொன்னார், ஒவ்வொரு மனிதனும் அறுபதாண்டுகளுக்குப்பின் புதிதாகப் பிறக்கிறான் என்று. அதேபோன்று பாரதியாரவர்கள் இப்போது இருபதாண்டு இளைஞர். நாவலர் அவர்களே என்று வாழ்த்துவதைக்காட்டிலும் 'பாரதித் தம்பி' என்று வாழ்த்துவதே பொருத்தம் என்று நினைக்கிறேன். எனக்கும் பாரதியாரவர்கட்கும் இருபத்தைந்தாண்டுகள் தொடர்புண்டு. இந்தமுறையிற் பார்த்தால் என்னைப் பொருத்தவரை இவ்விழா வெள்ளிவிழாவாகும். விழாவிற் கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்குப் பெரிதும் மகிழ்கிறேன். விழாக்குழுவினருக்கு நன்றி செலுத்துகிறேன். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துணை வேந்தர், இணைவேந்தர், ஆசிரியர்கள், மாணவர் சங்கச்சார்பில் பாரதியாரைப் பாராட்டிப் பேசுமாறு பல்கலைகழகத் துணை வேந்தர் என்னைக்கேட்டுக்கொண்டார். ஆதலின் அண்ணாமலைப் பல்கலைக்கழகச் சார்பில் யான் பாரதியாரைப் பாராட்டுகிறேன்.

''தமிழர்களும் தமிழும் வளமோடிருந்த காலத்தில் தமிழிலேயே திளைத்திருப்பதைக் காட்டிலும் மிகவும் தாழ்ந்திருந்த காலத்தில் தமிழைப்பற்றிப் பேசியவர்களே மிகவும் சிறப்புடையவர்கள்'' என்று தமிழவேள் அவர்கள் குறிப்பிட்டார்கள். பாரதியாரவர்கள், தமிழ்தாழ்ந்திருந்த காலத்தில் தமிழைப்பற்றி எண்ண – பேசத்தலைப்பட்டவர்கள். ஆங்கிலக்கண் கொண்டு தமிழைப்பார்த்த காரணத்தால்தான், தமிழை ஆழக்கற்றுப் புதிய கருத்துக்களைத் துணிவோடு கூறினர். தலைவர் அவர்கள் ''அண்ணாமலைப்பல்கலைககழகத்தின் ஒவ்வொரு கட்டிடமும் பாரதியாரைப் பற்றிப் பேசும்'' என்று குறிப்பிட்டார்கள். அவர் அங்குப் பணியாற்றியபோது ஒருசில துணைவேந்தர்கள் அஞ்சி வாழ நேர்ந்தது.

யார் தம்மை எள்ளி நகையாடினுலும் அதற்காகக் கவலைப் படமாட்டார். எழுத்திலும் பேச்சிலும் ஆற்றல் மிக்கவர். அப்பல்கலைக் கழகத்தில் தமிழுக்குச்சிறந்த இடத்தை அமைத்துத் தந்தவர்.

தொல்காப்பியத்திற்குப் பழையஉரைகள் பல உள்ளன. அவற்றில் உள்ள உண்மைகளைமட்டும் ஒப்புக்கொள்வோமே யன்றி நாம் உரையாசிரியர்க்கு அடிமையாகமாட்டோம். பழைய உரைகளில் அமைந்துள்ள பிழைகளைக்கண்டு அவற்றை நீக்க எண்ணிப் புதிய உரையொன்றை யாத்துள்ளார் நம் பாரதியார். எடுத்துக்காட்டாக "அமரர்கள் முடியும்..." என்னும் (தொல்) நூற்பாவில் அமரர் என்பதற்கு மற்றவர்கள் வேறுபொரு ளுரைக்க நம் பாரதியாரவர்கள், அமர் என்ருல் போர்; அமரர்-போர்வீரர் என்று புதிய உரையைத் தந்தார்கள். இவ்வாறு பல விடங்களில் அறிவுக்குப் பொருந்தும் முறையில் புதிய கருத்துக் களைத் தந்த பெருமை பாரதியாருக்கு உண்டு.

பாரதியாரவர்கள் இலக்கியத் தொண்டு புரிந்ததோடன்றி அரசியல்துறையிலும் வ. உ. சி, சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெரியார்களோடு சேர்ந்து அஞ்சா நெஞ்சத்துடன் பணி புரிந்துள்ளார்.

பழந்தமிழ்ப் பெரும்புலவர் என்று கூறத்தக்க முறையில் பாரதியாரை விட்டால் வேறு யார் இருக்கிருர்கள்? தமிழும் நாமும் வாழ, பாரதியாரவர்கள் இன்னும் பல்லாண்டு வாழவேண் டுமென்று வாழ்த்துகிறேன்.

பிறகு, தியாகராசர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர், திரு. சி. இலக்குவனர் அவர்கள் பாரதியாரைப் பாராட்டிப் பேசியதாவது:—

தலைவர் அவர்களே! தோழர்களே! உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மறைமலையடி களும், பாரதியாரும், என்னைத் தமிழ்ப்பணிக்கு உருவாக்கிய பெருமைக்குரியவர்களாவர். கல்லூரிகளிலும் பள்ளிகளிலும்

தமிழுக்குரிய இடம் இல்லாத காலத்தில் தமிழின் மீது பெருவிருப்பங் கொண்டு தமிழ் வளர்ச்சிக்கு அயராது பாடுபட்டவர் பாரதியார். நாவலர் தொடர்ந்து வழக்கறிஞராகப் பணி புரிந்து வந்திருந்தால் உயர்நீதி மன்ற நடுவராகப் பதவி ஏற்று ஒய்வு பெற்றிருக்கலாம். அவர் தமிழின் மீது ஆழ்ந்த பற்று கொண்டு தமிழுக்காகப் பாடுபட்டதற்காகவே நாம் பாராட்டு தெரிவிக்கின்றோம்.

பெருநாவலர் மறந்துங் கூடத் தமிழுக்குக் கேடு நினைத்ததுமில்லை; சொன்னதுமில்லை. ஏதேனும் எழுத வேண்டுமென்பதற்காக அவர் நூல் எழுதவில்லை. தமது கருத்துக்களைப் பிறருக்குக் கூறுவதற்காகவே நூல் எழுதினர்.

ஆங்கிலம் — செவிலித்தாய். எனவே செவிலித்தாயிடம் பற்றுக்கொண்டு மக்கள் நற்றாயை மறந்தனர். பிறநாடுகளில் அந்தந்த நாட்டு மொழியிற் சிறந்தவர்களே பலதுறைகளிலும் தலைமை பூண்டிருக்கின்றனர். நம் நாட்டில் அதற்கு மாறான நிலையே இருக்கின்றது.

திருவள்ளுவரும் தொல்காப்பியரும் தமிழரின் இரு கண்கள். இவ்விரு கண்களையும் மறவாமல் போற்றி வளர்ப்போம் என்று இத்தகைய சிறந்த நாளில் நாம் உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும். தமிழுக்கென உழைத்த நம் பாரதியாரைப் பாராட்டும் இத்தகைய விழாக்கள் தேசிய விழாவாக யாவரும் கொண்டாட வேண்டும். இதனை அரசாங்கம் முன்னின்று நடத்த வேண்டும்.

நம் பாரதியார் அவர்கள் புதுமையெண்ணமுடையவர்கள். எடுத்துக்காட்டாக,

'உடையார்முன் இல்லார் போல்' என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் வேறு பொருள் கூறியிருக்க நம் பாரதியார் அவர்கள் "உடையார் முன்னில்லார் போல்" எனப் பிரித்துப் புதுப் பொருளை யாத்துத் தந்துள்ளார்கள். மேலும் 'மாரிவாயில்'

என்னும் ஒரு நூலையும் யாத்துள்ளார்கள். இதற்கு மேக தூது எனப் பெயரிடாமல் 'மாரி வாயில்' எனப் பெயரமைத்ததைக் கொண்டே நம் பார்தியாருடைய தூய தனித் தமிழ்ப்பற்றைத் தெளிவாக அறியலாம்.

ஆங்கிலம் கடன் வாங்கி உருவானது. தமிழ் தானே உருவானது. ஆதலின் தூய தமிழ்ச் சொல்லைக் கொண்டு இயங்க முடியும் என்ற கொள்கையுடையவர் நம் பாரதியார்.

தமிழ் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற அவரிடம் அரசு ஆலோசனை கேட்டு அவருக்குப் பெருஞ்சிறப்பு அளித்திருக்க வேண்டும். தமிழ்க்கலைச் சொல்லாக்கத்திற்குத் தனித்தமிழ் ஆர்வம் மிக்க பாரதியாரைப் பயன்படுத்த அரசு தவறிவிட்டது. தமிழ்மறுமலர்ச்சியை உண்டாக்கிய பெருமைக்குரியவர் நம் பாரதியார். தமிழுக்கு இன்னும் உள்ள இழிநிலையைப் போக்க தமிழ்க்காவலராகப் பல்லாண்டு வாழவேண்டும், உரிமை பெற்ற தமிழகத்தின் குடியரசுத் தலைவராக விளங்கும்வரை அவர் சிறப்புடன் வாழ்வாராக,

நாவலர். திரு. ச. சோமசுந்தரபாரதியார் அவர்கள் தமக்களித்த பாராட்டிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் கூறியதாவது:—

தமிழை வாழ்த்தவே மதுரை மக்கள் என்னை வாழ்த்துகிறார்கள். அவர்களுடைய தமிழ்ப்பற்று பாராட்டுதற்குரியது. மற்றவர்கள் எண்ணுவதுபோல் நான் கிழவன் அல்ல. தமிழுக்குக் கேடு பயப்பவர்களை விரட்டியடிக்கத்தான் நான் வாழ்கின்றேன்.

யாவரும் அறியும் வகையில் வேதத்தை வைக்காமல் மறைத்துவைத்து ஒருசிலர்மட்டுமே அதற்கு உரிமை பாராட்டுவதைக் கண்டிக்கிறேன். மறை என்ற பெயர் கொண்ட நூல்களைப் புறக்கணிக்க வேண்டும். மறைத்துவைக்கப்படுவது தானே மறை! எதை மறைக்க வேண்டும்? ஒழுக்கக்கேட்டை மறைக்கவேண்டும் வேதத்தை ஏன் மறைக்கவேண்டும்? அதில் ஒழுக்கக்கேடு அதிகம் உள்ளது என்பதுதானே அதற்குப்

பொருள்? வேதத்தைத் தமிழில் காட்டுங்கள். "மனிதனைக்கொன்று உண்ணவேண்டும்" என்று இருக்கு வேதம் கூறுகிறது. வேதம் கூறுகிறது என்பதற்காக நாம் ஏற்றுக்கொள்ளலாமா? எதையும் அறிவோடு அஞ்சாமல் சிந்திக்கவேண்டும். அறிவுக்கொவ்வாதவைகளை விலக்கியே வாழ வேண்டும். தமிழர்கள் எதனையும் சிந்திக்காமல் அஞ்சி வாழ்கின்றனர். இதைக் கண்டு நான் மிகவும் வருந்துகின்றேன்;

உண்மையை இனிக்குமாறு நாம் கூறவேண்டும். சிந்தனை செய்பவர்களை நான் நாத்திகர்களாகக் கருதுவதில்லை. அறிவிற்கு என்றும் மதிப்பளித்துத் துணிவோடு அறிவு வழியில் செல்லுங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தலைவர் அவர்கள் முடிவுரைக்குப்பின், திரு. இராமையா அவர்கள் நன்றி கூறத் தமிழ்த்தாய்வாழ்த்துடன் கூட்டம் இனிதே முடிவுற்றது.

தமிழ்ச்சங்கம்
மதுரை — *செயலாளர்.*

"மூண்டெழுவாய்!"

"தென்னகத்தி லிந்திவரக் காணுகிறாய் தென்றமிழா!
முன்னகத்தில் வீறுடனே மூண்டெழுவாய்—உன்னகத்திற்
செந்தமிழ்நற் செங்குருதி சென்றோட வில்லைகொலோ!
வந்தமொழிக் கிங்கிடமோ? ஓர்!"

ஆ. துரைக்கண்ணு
ஊட்டியிபாளையம்.

மதிப்புரை:—

நான் கண்ட கலைப்புலவர்

வித்துவான், அன்பு-கருணையானந்தா. தமிழ் விரிவுரையாளர்
தமிழ்ச்சங்கக் கல்லூரி, மதுரை.

தெய்வப் புலவர்கள் தரும் நூல்களுக்கே செந்தமிழகத்தில் சிறப்பு மிகவும் உண்டு. அத்தகைய என்றுமுள தென்றமிழாக உண்மை நலங்கனிந்து நிலவும் நூலொன்று வெளிவருவதெனின் எளிதாங்கொல்? அங்ஙனமாய அரிய நூலொன்று வாழுளில் ஒருவர் தருவராயின் அதுவேசாலும்.

இற்றை ஞான்றோ மின்னல் வேகத்தில் நூல்கள் பல தோன்றுகின்றன. நொடிப்பொழுதில் மறைந்தும் விடுகின்றன. இவ்வுண்மையினை நன்குணர்ந்த யாழ்ப்பாணம் மத்தியகல்லூரிக் கலைப்புலவர். திரு. க. நவரத்தினம் அவர்கள் மக்கட்குப்பயன் தரும் நூல் பல யாத்துள்ளமை கண்டு மட்டற்ற மகிழ்ச்சி யுறுகின்றோம்.

இவர் தம் வாழ்க்கை வரலாற்றினை மக்கள் அறிந்து வாழ்வில் நலம் பெறுமாறு, பேரன்பர் திரு. கா. மாணிக்கவாசகனார், "நான் கண்ட கலைப்புலவர்" என்னும் இந்த நன்னூலை எழுதிவெளியிட்டுள்ளார். கலைப்புலவர் வாழ்க்கை ஒரு பொன்மலராகும். அதற்குப் புகழ்மணமாகிய, நறுமணம் ஊட்டிய பெருமை நூல் தந்த ஆசிரியரைச் சார்ந்ததாகும். சுருங்கக்கூறின், கலைப் புலவரின் வாழ்வின் விளக்கம், கலைக்கதிரோன் தரும். இன்ப விளக்கமே: இப்பெரியாரை, நமக்குப் படப்பிடிப்பின் மூலம் காணவைக்கும் கலைக்கண்ணாடியாகவும் இந்நூல் மிளிர்கின்றது. உருவில் சிறு நூலே அறிவுக்கு விருந்தளிக்கும் திருநூலாக அமைந்துள்ளது, பாவலர் நாவலர் அனைவருடைய பாராட்டும் நூலிடையே அமைந்திருப்பதே தக்கசான்றாம். இந்நூல் பண்பாட்டுடன்மக்கள் இன்பவாழ்வுபெறுதற்கமைந்தகருவி நூலாகும் கலைவளர்ப்பதன் மூலம் கலைப்புலவர்களையும் போற்றுவோமாக,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் நூல்கள்

I. சங்க வெளியீடு

			ரூ.	அ.	ப.
4.	வைத்தியசாரசங்கிரகம்	—	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	—	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றும் பாகம்	—	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	—	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	—	0	6	0
13.	கலைசைச்சிலேடை வெண்பா	—	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	—	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ண சரித்திர விமர்சனம்	—	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (தொகுப்பு)	—	0	4	0

II. செந்தமிழ் வெளியீடு

1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	—	0	4	0
2.	கனூல் (5) இனியது நாற்பது (உரை)	—	0	3	0
4.	புலவராற்றுப்படை	—	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	—	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	—	0	8	0
9.	அநுமான விளக்கம்	—	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	—	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	—	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	—	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	—	0	3	0
16.	திருவாரூருலா	—	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	—	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	—	0	4	0
19.	தேவையுலா	—	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	—	0	8	0
22.	திருக்கலம்பகமூலமும்உரையும்	—	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	—	0	8	0
24.	குருமொழி வினவிடை	—	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	—	0	2	0
26.	திருத்தணிகைதிருவிருத்தம்	—	0	1	0
27.	மதுரைத் திருப்பணிமாலை	—	0	8	0
30.	ஞானமிர்தக்கட்டளை	—	0	8	0
3'.	மநீஷாபஞ்சகம்	—	0	8	0
36.	உவமானசங்கிரகம்	—	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	—	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	—	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர் பிள்ளைத்தமிழ்	—	0	8	0
41.	பொருட்டொகை நிகண்டு	—	0	6	0
42.	அகராதி நிகண்டு	—	0	12	0
43.	மேகவிடு தூது	—	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	—	0	2	0
45.	தண்டலையார் சதகம்	—	0	4	0
46.	இராமோதந்தம்	—	0	3	0
47.	பழமொழி மூலமும் பழைய உரையும் (2-வது 100)		1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	—	0	6	0
52.	கூடற்புராணம்	—	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	—	0	6	0
54.	அரும்பொருள் விளக்க நிகண்டு	—	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும்	—	0	12	0
56.	பாப்பாவினம்	—	0	10	0
57.	மதுரை மும்மணிக்கோவை	—	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	—	0	3	0
59.	கடம்பர் கோயில் உலா	—	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	—	0	6	0
61.	கலைசைக்கோவை	—	0	12	0
62.	பெருந்தொகை	—	5	0	0
63.	சூடிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை	—	0	5	0
64.	சிராமலைக்கோவை	—	0	12	0
65.	மத்யவியாயோகம்	—	0	2	0
67.	அமிர்தரஞ்ஜனி	—	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும்	—	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	—	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	—	0	10	0

1. சங்கத்தினின்று திங்கள் ஒருமுறை அரிய பெரிய செய்திகளைக் கொண்டு வெளியாகிவரும் இச் "செந்தமிழ்" இதழுக்கு ஆண்டுக் கட்டணம் ரூ. 4-50. தனிப்படியின் விலை காசு 50 இதுவரை 54 தொகுதிகள் நிறைவாகியிருக்கின்றன இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 திங்கட் பகுதிகள் உள்ள பைண்டுசெய்யாத தொகுதி 1 ரூ. 4 வீதம் விற்கப்பெறும். வி. பி. கட்டணம் தனிச் செலவு.
2. சங்கப் பதிப்புப் புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு 3 காசு வீதம் கழிவு தள்ளிக்கொடுக்கப்படும்.

இவ்விதழ். மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள் திரு. பி. டி. இராசன் (B. A., Bar-at-law, M. L. C.) அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளது.